திரு. நா. காசிராமன் : 1,28,000 ரூபாய்க்கு மேல் செலவு செய்து நல்ல பணிகளை அனுபவிக்கக்கூடிய நிலைமையில் வெள்ளி விழா சீரூராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தக் கிராமம் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டது ? அதேமாதிரி மற்றக் கிராமங்களுக்கும் செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இந்தியாவின் 25-வது சுதந்திர வெள்ளி விழா ஆண்டையொட்டி ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு ஊராட்சியைத் தேர்ந்தெடுத்து மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து நடத்தும் திட்டம் இந்தத் திட்டம். இந்தத் திட்டத்திற்கான கிராமங்களைத் தேர்ந்தெடுப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குக் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அவர்கள் ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு ஊராட்சியைத் தேர்ந்தெடுத்து அனுப்பி இருக்கிறார்கள் அந்த அடிப்படையில் இது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

Applied Nutrition Programme

* 637 *Q* —THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Applied Nutrition Programme is being implemented in Kanyakumari district; and

(*b*) if so, the details of the Blocks, where it is being implemented?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) தக்கலை பஞ்சாயத்து ஒன்றியத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. என். டென்னிஸ் : கிள்ளியூர் வளர்ச்சி வட்டம் பிற்பட்ட வளர்ச்சி வட்டம். பொருளாதார நிலையில் பின்தங்கிய ஏழை மக்கள் இருக்கிறார்கள். அங்கு நியூட்ரிஷன் ப்ரோகிராம் திட்டம் ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : 1972–73-ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் தக்கலை உட்பட ஆறு வளர்ச்சி வட்டாரங்களில் திட்டத்தை செயல்படுத்துமாறு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

1974 மார்ச் 27]

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்தச் சத்துணவுத் திட்டத்தின் அடிப்படையில் இந்த வட்டாரங்களை விஸ்தரிக்க வேண்டுமென்று சொல்ல என்ன தகுதிகளை அரசாங்கம் நிர்ணயித்திருக்கிறது? தக்கலை ஊராட்சி ஒன்றியத்தை மட்டும் எடுப்பதற்கு விசேஷ காரணங்கள் உண்டா? தக்கலையில் ஆளும் கட்சி உறுப்பினர் தலைவராக இருக்கும் காரணத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டதா அல்லது வேறு என்ன காரணம்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இது ஆண்டுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட வளர்ச்சி வட்டாரங்களில் இத் திட்டம் தொடர்ந்து ஐந்து ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்படும். இதுவரை தக்கலை மாத்திரமல்லாமல் 38 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொரு கிராமமும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல் தக்கலை கன்னியாகுமரி மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. எந்தக் கட்சிக் கண்ணோட்டத்தோடும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஐந்தாண்டு காலத்திற்கு இத் திட்டத்தில் என்ன செய்ய வேண்டுமென்பதை எல்லாம் விவரமாகக் குறிப்பிட்டு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு அங்காங்கே ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக என்ன காரியங்கள் செய்யப்படுகின்றன என்ற விவர அறிக்கை வேண்டுமென்று கேட்டால் அதை வைக்கத் தயாராக இருக்கிறேன்.

Housing Projects

* 638 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have sought the assistance of the Hindustan Housing Factory for the Housing Projects of the State Housing Board; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.